**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108519

1. District : மாவட்டம் திருப்பூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 2/2021/AC/TPR | Date: நாள் 6.1.2021

2. (i) Act சட்டம்: Cr.PC — Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7 & 8
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 5.1.2021 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 1800hrs — Time to : நேரம் வரை 22.00hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 6.1.2021 — Time : நேரம் 15.30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D Vol I — Time : நேரம் 15.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — டைப் செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 3km தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம் திருப்பூர் வடக்கு, திருப்பூர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. ராஜ — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. ராமசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.4.1982 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் நில எடுப்பு சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர்/பொறுப்பு — (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) T1. R. குமார், வட்டார போக்குவரத்து அலுவலர், திருப்பூர் வடக்கு (2) T2. S. செந்தில்குமார் S/o. சண்முகம், D.No 71, ஆதியாக்கவுண்டன்பாளையம், கணபதிபாளையம் (Po) ஈரோடு
(3) T3. K. செந்தில்குமார் S/o. கோட்டையப்பன், தொட்டிபாளையம், திருப்பூர்.
(4) T4. P. செல்வகுமார் S/o. பழனிச்சாமி, D.No. 8/210, சின்னகாட்டுபாளையம், செங்கப்பள்ளி, திருப்பூர் (5) T5. பாலசுப்பிரமணியம் S/o. பழனிசாமி, D.No 82, சின்னகம்பாளையம், அவிநாசி, ஈரோடு மாவட்டம்
(6) T6. K. பாலசிங் S/o. கிருஷ்ணசாமி 1/126 A1, சொர்ணபுரம், ராகம் - திருப்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....................... Rank ....................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

06/01/2021

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

6.1.2021 - 17.00 hrs

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர் [illegible]

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2021/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 06.01.2021-ம் தேதி மதியம் 15.30 மணியளவில், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது திரு.R.ராசு, துணை வட்டாட்சியர், இ பிரிவு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புநர் திரு.R. ராசு, துணை வட்டாட்சியர், இ பிரிவு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம். பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர்.அம்மையீர், பொருள்: திடீர் தணிக்கை – வட்டார போக்குவரத்து அலுவலகம், திருப்பூர் வடக்கு- புகார் மனு வழங்குதல் - தொடர்பாக பார்வை: திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ப.வெ.எண்.73/2021/A7 நாள். 05.01.2021. நேற்று 05.01.2021-ம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம், சிறுபூலுவபட்டி மெயின்ரோட்டில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் பதிவுச்சான்றிதழ், வாகன ஒட்டுனர் உரிமம், ஒட்டுனர் உரிமம் புதுப்பித்தல், பர்மிட் மற்றும் அரசு பணிகளை மேற்கொள்வதற்கு ஒட்டுனர் பயிற்சிப்பள்ளி மூலமாகவும் பொதுமக்களிடம் நேரடியாகவும் கையூட்டாக பணம் கேட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் நான், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை 05.01.2021-ம் தேதி மாலை சுமார் 18.00 மணி முதல் 05.01.2021-ம் தேதி இரவு 22.00 மணி வரை திடீர் தணிக்கை செய்தும், திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.குமார், ஈரோடு கணபதிபாளையம், ஆயிக்கவுண்டன்பாளையம் கதவு எண் 71 ல் வசிக்கும் சண்முகம் என்பவரின் மகன் S.செந்தில்குமார், திருப்பூர் தோட்டத்துபாளையத்தை சேர்ந்த AKP Auto . Consulting

வைத்துள்ள கோட்டையப்பன் என்பவரின் மகன் K.செந்தில்குமார், செங்கப்பள்ளி சின்னகாடபாளையம், கதவு எண் 8/210 ல் வசிக்கும் பழனிசாமி என்பவரின் மகன் சசிகுமார், பல்லடம் கிளையில் உள்ள பாரத் பென்ச் என்ற நிறுவனத்தில் சேல்ஸ் மேனேஜராக பணிபுரியும் அந்தியூர் சின்னதம்பிபாளையம், கதவு எண் 82 ல் வசிக்கும் ராமசாமி மகன் ஈஸ்வரமூர்த்தி, திருப்பூர் கே.எஸ்.சி ஸ்கூல் ரோட்டில் கணபதி ஆட்டோ கன்சல்டிங் நடத்தி வரும் திருப்பூர், வெங்கடேஸ்வரா நகர், கதவு எண் 1/1268 A1 என்ற முகவரியில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் பாஸ்கர் ஆகியோர்களிடமிருந்து கணக்கில் வராத மொத்த பணம் ரூ.2,29,010/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,29,010/-, பச்சை நிற கவர் மற்றும் மேற்படி அலுவலகத்தின் வருகைபதிவேடு மற்றும் தினசரி பண கையிருப்பு பதிவேடு நகல்கள் சான்றொப்பமிட்டு பெறப்பட்டவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் XXXXX R.ராசு, துணை வட்டாட்சியர், இ பிரிவு மற்றும் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு),மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம். நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. Sir, received the above written complaint with enclosures on 06.01.2021 at 15.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.2/2021/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 and 8 of P.C (Amendment) Act 2018 ஒப்பம் xxxx R.கௌசல்யா 6/01/2021 Inspector of Police, V&AC, Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை: திரு.1) R.ராசு, துணை வட்டாட்சியர், இ பிரிவு, சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மாவட்டம் 2) திருமதி. R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 05.01.2021-ம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம் சிறுபூலுவபட்டி மெயின்ரோட்டில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் பதிவுச்சான்றிதழ், வாகன ஓட்டுனர் உரிமம், ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தல், பர்மிட் மற்றும் அரசு பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி மூலமாகவும் பொதுமக்களிடம் நேரடியாகவும் கையூட்டாக பணம் கேட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற

நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திருப்பூர் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு ) திரு.R.ராகு ஆகிய நான் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி R. கௌசல்யா மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோர்களுடன் மேற்படி அலுவலகத்தை இன்று 05.01.2021 ம் தேதி மாலை சுமார் 18.00 மணி அளவில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் விபரம் பின்வருமாறு. இந்த திடீர் தணிக்கை சகிதம் திருப்பூர் மாவட்டம் சிறுபூலுவபட்டி மெயின்ரோட்டில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் நுழைய முற்பட்டபோது TN 39 G 0999 BOLERO என்ற அரசு வாகனத்தில் திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. குமார் அவர்கள் புறப்பட முற்பட்டபோது அவரிடம் அறிமுகம் செய்து கொண்டு அவரை அவருடைய அலுவலக அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. மேலும் அவரது அறைக்கு வெளியே நின்றிருந்த நபர்களையும் RTO அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. அங்கு RTO திரு. R.குமார் அவர்களை மேற்படி நபர்களிடமிருந்து தனியாக அழைத்து விசாரிக்க அவர் தான் திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் RTO ஆக கடந்த 17.06.2019 ம் தேதி முதல் பணி புரிந்து வருவதாக கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து தனது சட்டையின் இடதுபுற மேல் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 3,450/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க ரூ. 2,900/- தனது சொந்த பணம் என்றும் அது குறித்து தினசரி பண கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார். மீத தொகை பற்றி விளக்கம் எதுவும் கூறாததால் ரூ. 2,900/- ஐ திருப்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மீதி பணம் ரூ. 550/- ஐ கையூட்டாக பெற்ற பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை தனியாக அழைத்து சென்று விசாரிக்க அவர் சென்ற வாரம் முதல் இன்று வரை கையூட்டாக கிடைக்கப்பெற்ற தொகை ரூ. 2,00,000/- ஐ டிரைவர் ஆனந்த் ஜெயபிரசாத்திடம் கொடுத்து வைத்திருப்பதாக கூறினார். இதை ஆனந்த் ஜெயபிரசாத்திடம் விசாரிக்க அவரும் ஆம் என்று சொல்லி அது வெளியே இருப்பதாகவும் அதை எடுத்து வந்து ஆஜர் செய்வதாகவும் கூறிச்சென்றார். பிறகு மேற்படி அறையில் இருந்த பி3 இளநிலை உதவியாளர் திரு.சதீஷ்குமார் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே முன்வந்து பணம் ரூ. 320/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது

சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அறையில் இருந்த ஒலப்பாளையத்தை சேர்ந்த திரு.மூர்த்தி என்பவரை விசாரிக்க தான் திருப்பூர் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தற்காலிகமாக RTO திரு.குமார் அவர்களுக்கு உதவியாக கடைக்கு சென்று டீ வாங்கி வருவது மற்றும் கோப்பு கோர்க்கும் வேலை செய்து வருவதாகவும் அதற்கு தனக்கு RTO திரு.குமார் அவர்கள் தினக்கூலியாக ரூ. 100/- கொடுத்து வருவதாகவும் கூறி தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 680/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க இது அவர் சொந்த பணம் என்பதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையில் இருந்த கருவம்பாளையத்தை சேர்ந்த திரு. பிரபு என்பவரை விசாரிக்க அவர் திருமுருகன் பூண்டியில் ST ரோடுவேசில் வேலை பார்ப்பதாகவும் பாரத்பென்ச் என்ற வாகனத்திற்கு தேசிய அனுமதி பெறுவதற்கு வந்திருப்பதாக கூறி தனது பேண்டின் இடது புற பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 1,000/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க இது அவர் சொந்த பணம் என்பதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஈரோடு கணபதிபாளையம், ஆயிக்கவுண்டன்பாளையம் கதவு எண் 71 ல் வசிக்கும் சண்முகம், என்பவரின் மகன் S.செந்தில்குமார் என்பவரை விசாரிக்க அவர் தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 12,410/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் மேற்படி பணம் கையூட்டு கொடுக்க வந்த பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. அடுத்தபடியாக மேற்படி அறையில் இருந்த திருப்பூர் தோட்டத்துபாளையத்தை சேர்ந்த கோட்டையப்பன் என்பவரின் மகன் K.செந்தில்குமார் என்பவரை விசாரிக்க அவர் தான் வீட்டிலேயே AKP ஆட்டோ கன்சல்டிங் வைத்து தொழில் செய்து வருவதாகவும் ஓட்டுனர் உரிமம் கோருவோர்க்கு மேற்படி RTO அலுவலகத்தை அணுகி பெற்றுத்தரும் வேலை செய்து வருவதாகவும் கூறி தானாகவே முன்வந்து தனது சட்டையின் இடது புற பாக்கட்டில் இருந்து பணம் ரூ.7,500/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் மேற்படி பணம் கையூட்டு கொடுக்க வந்த பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையில் இருந்த

செங்கப்பள்ளி சின்னகாடபாளையம்,கதவு எண் 8/210 ல் வசிக்கும் பழனிசாமி என்பவரின் மகன் சசிகுமார் என்பவரை விசாரிக்க அவர் தான் திருப்பூர் தாராபுரம் ரோட்டில் உள்ள C. தங்கராஜ் ஆட்டோ கன்சல்டிங் என்ற டிரைவிங் ஸ்கூலில் வேலை பார்த்து வருவதாகவும் தனது பேண்டின் வலது புற பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 1,260/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் மேற்படி பணம் கையூட்டு கொடுக்க வந்த பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையில் இருந்த B1 உதவியாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரிக்க அவர் தானாவே முன்வந்து பணம் ரூ. 700/- ஐ தனது இடது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன்பிறகு மேற்படி அலுவலகத்தின் முதல் நிலை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. வேலுமணி அவர்களை விசாரிக்க அவர் தானாக முன்வந்து தனது சட்டையின் இடது புற பாக்கட்டில் இருந்து பணம் ரூ.440/- எடுத்து ஆஜர்செய்தார். இது குறித்து விசாரிக்க அவரது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அறையில் இருந்த மேற்படி அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திரு. புர்காமுதின் என்பவரை விசாரிக்க அவர் தனது இடதுபுற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 870/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அறையில் இருந்த அந்தியூர் சின்னதம்பிபாளையம் கதவு எண் 82 ல் வசிக்கும் ராமசாமி மகன் ஈஸ்வரமூர்த்தி என்பவரை விசாரிக்க அவர் பல்லடம் கிளையில் உள்ள பாரத் பென்ச் என்ற நிறுவனத்தில் சேல்ஸ் மேனேஜராக பணிபுரிவதாக கூறி தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ.5,220/- எடுத்து ஆஜர் செய்தார் இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் மேற்படி பணம் கையூட்டு கொடுக்க வந்த பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. அவருடன் அறையில் இருந்த திரு.P.V.கிருஷ்ணசாமி என்பவரை விசாரிக்க அவர் தான் மேற்படி ஈஸ்வரமூர்த்தி அவருடன் வந்ததாக கூறி தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 320/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த

பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அறையில் இருந்த சாமுண்டிபுரம் குலாம் காதர் கார்டன் கதவு எண் 1/11 ல் வசிக்கும் ஆறுமுகம் என்பவரின் மகன் A.குமாரவேலு என்பவரை விசாரிக்க தானாவே முன் வந்து அவர் தான் முன்பு எல்காட் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்ததாகவும் தற்போது வேலை தேடி அலுவலகம் வந்ததாக கூறி தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 2,040/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையில் இருந்த திருப்பூர் வெங்கடேஸ்வரா நகர் கதவு எண் 1/1268 A1 என்ற முகவரியில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் பாஸ்கர் என்பவரை விசாரிக்க அவர் தான் திருப்பூர் கே.எஸ்.சி ஸ்கூல் ரோட்டில் கணபதி ஆட்டோ கன்சல்டிங் நடத்தி வருவதாக கூறி தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 2,070/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் மேற்படி பணம் கையூட்டு கொடுக்க வந்த பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. அறையில் இருந்த A1 உதவியாளர் திருமதி ஹேமலதா என்பவரை விசாரிக்க அவர் தனது கைப்பையில் இருந்து பணம் ரூ. 500/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அறையில் இருந்த குமார்நகர் அம்மன் டிரைவிங் ஸ்கூலைச்சேர்ந்த சென்னியப்பன் என்பவரை விசாரிக்க தனது பின்புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ. 150/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அறையில் இருந்த எம்.ஜி.ஆர் காலனியை சேர்ந்த சேக்முகமது என்பவரை விசாரிக்க அவர் தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்து பணம் ரூ.1,410/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை நடந்து கொண்டிருந்தபோது திருமுருகன் பூண்டி ST Roadways என்ற டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தை சேர்ந்த சரவணக்குமார் என்பவர் அலுவலகத்திற்குள் நுழைந்தார் மேற்படி நபரை விசாரிக்க அவர்தான் தனது பாரத்பென்ச் வண்டிகளுக்கு தேசிய அனுமதி பெறுவதற்காக வந்திருப்பதாக கூறி தான் வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்த

பணம் ரூ.3,270/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் தேசிய அனுமதி பெற்று சென்றார். மேலும் அறையில் இருந்த ஊத்துக்குளி காவல் நிலையத்தை சேர்ந்த இரண்டாம் நிலை காவலர் 364 திரு சரண்ராஜ் என்பவரை விசாரிக்க தான் குற்ற வழக்கு சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்விற்கு ஆஜர் செய்ய வந்ததாக கூறி தனது வலது புற பேண்ட் பாக்கட்டில் இருந்த பணம் ரூ.2,000/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க தனது சொந்த பணம் என்று கூறியதால் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வெளியே சென்ற ஓட்டுனர் ஆனந்த் ஜெயபிரசாத் என்பவர் RTO திரு.குமார் அவர்கள் தன்னிடம் கொடுத்து வைத்திருந்த பணம் ரூ.2,00,000/- த்தை பச்சை நிற கவருடன் கொண்டு வந்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் ரூ.2,29,010/- பணம் விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. கொடிநாள் வசூல் குறித்து RTO திரு.குமார் அவரிடம் விசாரிக்க கொடிநாள் வசூல் எதுவும் தற்போது இவ்வலுவலகத்தில் இல்லை என கூறினார். இவ்வலுவலகத்தின் வருகைபதிவேடு மற்றும் தினசரி பண கையிருப்பு பதிவேடு குறித்து கேட்க திரு.ஹேமலதா தன் பராமரிப்பில் இருக்கும் மேற்படி இரண்டு பதிவேடுகளை எடுத்து ஆஜர் செய்ததை நகல் எடுத்து RTO திரு.குமார் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணையின்பொருட்டு கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையானது 05.01.2021 ம்தேதி மாலை 18.00 மணிக்கு துவங்கி இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது மடிக்கணினியில் தலைமைக்காவலர் எண் 740 திரு.வெங்கடேசன் என்பரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அரசு அலுவலர்களையும் மற்ற நபர்களையும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர். பெண் அலுவலரை வடக்கு சட்டம் ஒழுங்கு காவல் நிலைய முதல் நிலை காவலர் 784 வனிதா முத்துசரம் என்பவரால் தணிக்கை செய்யப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் xxxx R.ராசு, துணைவட்டாட்சியர், இ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர். R.குமார், வட்டார போக்குவரத்து அலுவலர், திருப்பூர் வடக்கு, S.செந்தில்குமார், K.செந்தில்குமார், P.சசிகுமார், R.ஈஸ்வரமூர்த்தி, K.பாஸ்கர், S.ஆனந்த் ஜெயபிரசாத், ஓட்டுநர், K. ஹேமலதா,

A1 இருக்கை, S. வெங்கடேசன், HC 740, P.வனிதா முத்துசரம், Gr I 784 மற்றும் R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,29,010/- மற்றும் பச்சை நிற கவரையும் இன்று 06.01.2021-ம் தேதி 15.30 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.02/2021/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 and 8 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் 15.45 மணிமுதல் 16.45 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள், திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை, பணம் ரூ.2,29,010/- மற்றும் பச்சை நிற கவர் ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

R. K. Inspr V&AC TPR 6/1/2021

காவல் ஆய்வாளர்
ஊ.த.க.பிரிவு
திருப்பூர்.